# காரல்மார்க்சும்
## வேதாத்திரி மகரிசியும்.



# காரல்மார்க்சும்
# வேதாத்திரி மகரிசியும்.

## அருள்நிதி
## மன்னார்குடி பானுகுமார்

www.banukumar.in

# காரல்மார்க்சும் வேதாத்திரி மகரிசியும்.

ஜெர்மனியில் தோன்றிய காரல் மார்க்சு மெய்யியலார்களுள் ஒருவராவார். அறிவியல் சார்ந்த பொதுவுடைமையை வகுத்தவருள் முதன்மையானவர்.

இந்தியாவில் தோன்றிய வேதாத்திரி மகரசியும் ஆன்மீக ஞானிகளுள் ஒருவர். பொதுவுடமை சிந்ததாந்தத்தையும் முன்வைப்பவர்.

இந்த இரண்டு சான்றோர்களும், மெய்யியலாளராக மட்டுமல்லாது அரசியல் பொருளாதார வரலாற்றியல் வல்லுனராக, தலைசிறந்த ஆய்வறிஞராக, எழுத்தாளராக, சிந்தனையாளராக, புரட்சியாளராக கார்ல் மார்க்சும் வேதாத்திரி மகரிசியும் அறியப்படுகிறார்கள்.

பல்வேறு துறைகளிலும் ஏராளமான விவகாரங்கள் பற்றிய ஆய்வுகளையும் கருத்துக்களையும் காரல் மார்க்சும் வேதாத்திரி மகரிசியும் வெளியிட்டுள்ளார்கள.

என்றாலும் இவர்களது ஆய்வுகளும், கருத்துக்களும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளின் அடிப்படையில் வரலாற்றை ஆய்வதாகவே அமைந்தது.

கார்ல் மார்க்சு, (கி.பி.1818-1883)தற்போது ஜெர்மனியின் ஒரு பகுதியாக இருக்கும் புருசியாவில் ட்ரையர் நகரில் 1818 மே 5-ஆம் நாள் பிறந்தார்.

வேதாத்திரி மகரசி இந்தியாவின் தமிழகத்தில் ஒருபகுதியான கூடுவாஞ்சேரியில் (கி.பி.1911-2005) அவதரித்தார். .

கார்ல் மார்க்சு தந்தை வசதி படைத்த வழக்குரைஞர், கார்ல் மார்க்சு அவருக்கு மூன்றாவது மகனாவார். கார்லின் இளவயது பற்றி அதிகம் வெளியே தெரியவில்லை.

வேதாத்திரி மகரிசியின் தந்தை ஏழை நெசவாளி. விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பது போல- இளமையிலே கடவுள் யார்? வறுமை ஏன் வருகிறது? என்று சிந்தித்தவர்.

1830 வரை தனிப்பட்ட முறையில் கார்ல் மார்க்சுக்கு கல்வி கற்பிக்கப்பட்டது. கார்ல் தமது பதினேழாம் வயதில் சட்டம் பயில பான் பல்கலைக் கழகம் சென்றார்.

பெர்லின் பல்கலைக்கழகத்தில் வரலாறு, மெய்யியல் ஆகிய துறைகளில் பயின்ற கார்ல் மார்க்சு யெனா பல்கலைக்கழகத்தில் மெய்யியலுக்கான முனைவர் பட்டத்தினைப் பெற்றார்.

வேதாத்திரி மகரிசி மூன்றாம் வகுப்பு வரைதான் படித்தார். ஆனால் முதல் குருவாக தந்தையார் முதல் பல குருமார்களிடம் பயின்று ஞானமடைந்தார்.

1841இல் பட்டம் பெற்ற மார்க்சு சில காலம் இதழியல் துறையில் இருந்தார். கொலோன் நகரில் *ரைனிஷ் ஸைத்துங்* எனும் இதழின் ஆசிரியராக இருந்தார்.

வேதாத்திரி மகரிசி ஏழை நெசவாளியாக உழைத்து படிப்படியாக நெசவுத் துறையில் உயர் நிலைக்கு வந்தார்.

தனது ஆராய்ச்சியால் உலக சமுதாய சேவா சங்கத்தை தொடங்கி உலக அமைதிக்காக வித்திட்டார்.

மனவளக்கலை வாயிலாக ஒரு மாபெரும் சமுதாயத்தில் ஒரு புரட்சியை உண்டாக்கினார்.

பொதுவுடைமைக் கொள்கைகளின் மூலவர்களுள் ஒருவராக கார்ல் மார்க்சு கருதப்படுகிறார். *பொருளாதார விடுதலையே மனிதகுலம் மல***ர்ச்சிய***டைய வழி என சிந்தித்தவர் காரல்மார்க்ஸ்.*

தனி மனித அமைதி பின் உலக அமைதி ஏற்பட திட்டம் வகுத்தவர் வேதாத்திரி மகரிசி.

வறுமையை ஒழிக்க பொருளாதார விடுதலையை மலர்ச்சியடைய வழி என இவரும் சிந்தித்தவர்.

காரல் மார்க்சு 65 ஆண்டுகள் வரை வாழ்ந்தார். வேதாத்திரி மகரிசி 95 ஆண்டுகள் வரை வாழ்ந்தார்கள்.

## கார்ல் மார்க்சு வாழ்க்கைக் குறிப்பு (கி.பி.1818-1883)

கார்ல் மார்க்சு, தற்போது ஜெர்மனியின் ஒரு பகுதியாக இருக்கும் புருசியாவில் ட்ரையர் நகரில் 1818 மே 5-ஆம் நாள் பிறந்தார். .

இவரின் தந்தை வசதி படைத்த வழக்குரைஞர், கார்ல் மார்க்சு அவருக்கு மூன்றாவது மகனாவார்.

பெர்லின் பல்கலைக்கழகத்தில் வரலாறு, மெய்யியல் ஆகிய துறைகளில் பயின்ற கார்ல் மார்க்சு யெனா பல்கலைக்கழகத்தில் மெய்யியலுக்கான முனைவர் பட்டத்தினைப் பெற்றார்.

1841இல் பட்டம் பெற்ற மார்க்சு சில காலம் இதழியல் துறையில் இருந்தார். கொலோன் நகரில் *ரைனிஷ் ஸைத்துங்* எனும் இதழின் ஆசிரியராக இருந்தார்.

ஆனால் அவருடைய தீவிர அரசியல் கருத்துகளின் விளைவாக இடர் ஏற்படவே பாரிசு சென்றார்.

அங்கு 1844-ல் பிரெடரிக் ஏங்கல்சைச் சந்தித்தார். ஒருமித்த கருத்தும் மிகுந்த திறமையும் கொண்ட இருவருக்கும் இடையே நட்பு மலர்ந்தது.

அவர்களிடையே தோன்றிய தனிப்பட்ட உறவும் அரசியல் நட்பும் இறுதிவரை நிலைத்திருந்தது.

பாரிசில் இருந்தபோது லுட்விக் பொன் வெஸ்ற்ஃபாலென் பிரபுவின் மகளான 21 வயது நிறைந்த ஜெனியுடன் மார்க்சுக்கு காதல் மலர்ந்தது. அப்போது மார்க்சுக்கு வயது 17.

பிரபுத்துவக் குடும்பத்தைச் சேர்ந்த ஜெனியின் சகோதரர் ஒருவர் பின்னாளில் புருசியாவின் அமைச்சரவையில் பொறுப்பு வகித்தவர்.

கடுமையான குடும்ப எதிர்ப்பின் காரணமாக எட்டு ஆண்டுகள் தமது காதலை கமுக்கமாக வைத்திருந்த மார்க்சு, ஜெனிக்கு 29

வயதான போது அவரைத் திருமணம் செய்துகொண்டார்.

மார்க்சுக்கும் ஜெனிக்கும் ஏழு குழந்தைகள் பிறந்தனர். எனினும் மூவர் தவிர ஏனையோர் சிறு வயதிலேயே இறந்துவிட்டனர்.

*நியூயோர்க் டெய்லி டிரிபியூன்* என்னும் முற்போக்கு இதழுக்கு ஆக்கங்கள் எழுதிய போதும் மார்க்சுக்கு உறுதியான வருமானம் என்று எதுவும் இருக்கவில்லை.

அவர் அந்த இதழின் ஐரோப்பிய அரசியல் நிருபராக இருந்தார். ஒவ்வொரு கட்டுரைக்கும் ஒரு பவுண்டு பணம் வழங்கினர் .

ஆயினும் அவர் எழுதிய கட்டுரைகள் முழுவதும் பதிப்பாகவில்லை.

1862 வரை டிரிபியூனுக்கு எழுதி வந்தார். ஜெனியின் உறவினர் ஒருவர் இறந்தபோதும், ஜெனியின் தாய் இறந்தபோதும் ஜெனிக்கு மரபுரிமையாக ஓரளவு பணம் கிடைத்தது.

இதனால் அவர்கள் இலண்டனின் புறநகர்ப் பகுதியான கெண்டிஷ் நகரில் இன்னொரு வீட்டுக்குக் குடிபெயர முடிந்தது.

வருமானம் குறைவாக இருந்ததால் மார்க்சு பொதுவாக அடிப்படை வசதிகளுடனேயே வாழ்ந்து வந்தார்.

எனினும், தனது மனைவி, குழந்தைகளின் சமூகத் தகுதியைக் கருதி ஓரளவு நடுத்தர வகுப்பு ஆடம்பரங்களுக்கும் செலவு செய்ய வேண்டியிருந்தது.

## பணியும் இடர்களும்

ஜார்ஜ் வில்லியம் பிரெடரிக் ஹெகல் என்பவரின் தருக்கமுறை மற்றும் வரலாற்று பார்வை, பொருளாதார அறிஞரான ஆடம் சிமித், டேவிட் ரிக்கார்டோ போன்றவர்களின் செவ்வியல் பொருளியல் கருத்துக்கள், பிரான்சு தத்துவவியலாளர் ஜான் ஜாக் ரூசோவின் குடியரசு பற்றிய கருத்துக்கள் ஆகியவற்றால் மார்க்சு மிகவும் கவரப்பட்டார்.

கார்ல் மார்க்க்சு பிரான்சிலிருந்து வெளியேற்றப்பட்டு பிரசல்ஸ் சென்றார். அங்குதான் 1847-ல் "தத்துவத்தின் வறுமை" (The Poverty of Philosophy) என்னும் தமது முதல் நூலை வெளியிட்டார்.

அடுத்த ஆண்டில் ஏங்கல்சுடன் சேர்ந்து "பொதுவுடமை அறிக்கை" (The Communist Manifesto) எனும் நூலையும் வெளியிட்டார். அது மிகப் பலர் வாசிக்கும் நூலாகும்.

இறுதியில் மார்க்சு கொலோன் நகருக்குத் திரும்பினார். ஆனால் சில மாதங்களுள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டார்.

பிரான்சு, பெல்சியம், செருமனி ஆகிய நாடுகளின் புரட்சிகர இயக்கங்களில் பங்காற்றி ஒன்றிலிருந்து இன்னொன்றுக்கு நாடு கடத்தப்பட்ட மார்க்ஸ், இலண்டன் சென்று அங்கேயே இறுதிவரை வாழ்ந்தார்.

## நிதி உதவிகள்

மார்க்சு இதழியல் தொழிலில் சிறிது பணம் ஈட்டிய போதும் தம் வாழ்வின் பெரும் பகுதியை இலண்டனில் ஆராய்ச்சியிலும் அரசியல், பொருளியல் பற்றிய நூல்களை எழுதுவதிலும் கழித்தார்.

இவருக்கு பிரெட்ரிக் ஏங்கல்சு வழங்கிய கொடை அந்நாட்களில் குடும்பம் வாழ்வதற்கு உதவியாக இருந்தது.

மார்க்சின் பெற்றோர் இறந்த போது அவருக்கு மரபுரிமையாக சிறிது பணம் கிடைத்தது.

1845 இல் மார்க்சு தோற்றுவித்த முதலாவது பொதுவுடமை கழகத்தின் பதினான்கு உறுப்பினர்களுள் ஒருவரான வில்ஹெம் வோல்ஃப் அறுநூறு பவுண்டு அளவில் விருப்புரிமைக் கொடை அளித்தார்.

1850இல் நாடு கடந்து இலண்டனில் வாழ்ந்த காலத்தில் மார்க்சு கடும் வறுமைக்குள்ளானார்.

அக்காலத்தில் கடன் கொடுத்தவர்களுக்குப் பயந்துகொண்டே வாழும் நிலை ஏற்பட்டது.

தன்னுடைய ஆடைகள் எல்லாம் அடமானத்தில் இருந்ததால் அவர் வீட்டைவிட்டே வெளியே செல்ல முடியாமல் போன ஒரு காலமும் இருந்தது. ஒருமுறை தனது வீட்டைவிட்டு விரட்டப்பட்டார்.

தன் தந்தையின் இறப்புக்கு பின் ஏங்கல்சு தனது குடும்ப வணிகத்தில் கிடைத்த வருமானத்தில் மார்க்சுக்கு 350 பவுண்டு ஓய்வூதியத்துக்கு ஏற்பாடு செய்தார். இதுவே மார்க்சின் குறிப்பிடத்தக்க வருமானமாக இருந்தது.

## மூலதனம் நூல்

அக்காலத்தில் இங்கிலாந்து, ஐரோப்பாவிலிருந்து வெளியேறிய அரசியல் ஏதிலிகளுக்குரிய புகலிடமாக இருந்தது.




அக்காலகட்டத்தில் பெரும் முயற்சியில் கட்டிய பிரமாண்டமான **பிரித்தானிய அருங்காட்சியகத்தின்** கட்டுமான வேலைகள் நிறைவுற்றிருந்தது.

மார்க்சு நாள் தவறாது அங்குச் சென்று ஒவ்வொரு வேலை நாளிலும் 12 மணி நேரத்தை அங்குச் செலவிட்டு வந்தார். அங்கே தான் மூலதனம் எனும் நூல் தோன்றியது.

கார்ல் மார்க்சின் சிறப்பு வாய்ந்த மூலதனம் நூலின் முதல் தொகுதி 1867இல் வெளிவந்தது.

1883இல் மார்க்சு இறந்த பிறகு அவர் விட்டுச் சென்ற குறிப்புகளையும் கையெழுத்துப் படிகளையும் பிரெட்ரிக் ஏங்கல்ஸ் பதிப்பித்து வெளியிட்டார்

## மார்க்சின் சிந்தனைகள்

மார்க்சு மறைந்து ஒரு நூற்றாண்டுக்குப் பின் இன்று மார்க்சியக் கொள்கையைப் பின்பற்றுவோரின் தொகை 130 கோடியாகும்.

மானுட வரலாற்றில் ஒட்டு மொத்த எண்ணிக்கையிலும், உலக மக்கள் தொகையின் விழுக்காட்டிலும் இத்தனை பேர் வேறு எந்த கொள்கையையும் பின்பற்றவில்லை[1].

மார்க்சைப் போல மார்க்சியவாதிகளாலும் எதிர்ப்பாளர்களாலும் ஒன்று போலவே பிழையாக புரிந்து கொள்ளப்பட்டவர்கள் தற்கால வரலாற்றில் மிகவும் குறைவு என மார்க்சு பற்றி ஆய்வு செய்தவரான அமெரிக்காவின் ஹால் டிராப்பர் ஒருமுறை குறிப்பிட்டார்.

மார்க்சின் சிந்தனைகளைப் பல்வேறு குழுக்கள் பல்வேறு வகையாக விளக்கியுள்ளன.

இவர்களுள், மார்க்சிய-லெனினியவாதிகள், டிரொஸ்கியிசவாதிகள், மாவோயிசவாதிகள், தாராண்மை மார்க்சியவாதிகள் என்போர் அடங்குவர்.

## மார்க்சு சிந்தனைகளில் செல்வாக்குச் செலுத்தியவை

மார்க்சின் சிந்தனைகளில் பல முந்திய, சமகாலச் சிந்தனைகளின் செல்வாக்கு உள்ளது. அவற்றுள் சில:

- ஹேகலின் முறைகளும், வரலாற்று ஆய்வுப்போக்கும்.
- ஆடம் சிமித், டேவிட் ரிக்காடோ போன்றோரின் செந்நெறி அரசியல் பொருளாதாரம்.
- பிரெஞ்சு சோசலிச, சமூகவியல் சிந்தனைகள். குறிப்பாக ஜான் ஜாக் ரூசோ, ஹென்றி டி செயின்ட்-சிமோன், சார்லஸ் ஃபூரியர் போன்றோரின் சிந்தனைகள்.
- முந்திய செருமானிய மெய்யியல் பொருள்முதல்வாதம், குறிப்பாக லுட்விக் ஃபியுவெர்பக்.
- பிரடெரிக் ஏங்கெல்சின் தொழிலாளர் வர்க்கத்தினருடனான ஒருமைப்பாடு.

வரலாற்றுப் பொருள் முதல்வாதம் எனப்படும் மார்க்சின் வரலாறு பற்றிய நோக்கு ஹேகெலின் சிந்தனைகளின் தாக்கத்தைக் கொண்டது ஆகும்.

மனித வரலாறு துண்டு துண்டாக இருந்து முழுமையையும் உண்மையையும் நோக்கிச் செல்லும் இயல்பு கொண்டது என ஹேகல் நம்பினார்.

இந்த உண்மைநிலை நோக்கிச் செல்லும் வழிமுறை படிமுறையானது என்றும், சில வேளைகளில் இருக்கும் நிலைக்கு எதிராக தொடர்ச்சியற்ற புரட்சிகரமான பாய்ச்சலும், எழுச்சிகளும் தேவை என்றும் ஹேகல் விளக்கியிருந்தார்.

எடுத்துக்காட்டாக, ஹேகல் ஐக்கிய அமெரிக்காவில் நடைமுறையில் இருந்த அடிமை முறையைத் தீவிரமாக எதிர்த்து வந்ததுடன், கிறித்தவ நாடுகள் இதனை ஒழித்துவிடுவார்கள் என்றும் கணித்தார்.

## மார்க்சின் மெய்யியல் கொள்கைகள்

மார்க்சின் மெய்யியல் அவரது மனித இயல்பு பற்றிய நோக்கில் தங்கியுள்ளது. அடிப்படையில், மனிதனுடைய இயல்பு இயற்கையை மாற்றுவது என்று மார்க்சு கருதினார்.

அவ்வாறு இயற்கையை மாற்றும் செயல்முறையை "உழைப்பு" என்றும் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான வல்லமையை உழைக்கும் திறன் என்றும் அவர் அழைத்தார்.

மார்க்சைப் பொறுத்தவரை, இது ஒரே நேரத்தில் உடல் சார்ந்ததும் மனம் சார்ந்ததுமான செயற்பாடு ஆகும்.

- *ஒரு சிலந்தி ஒரு நெசவாளியை ஒத்த செயல்பாடுகளில் ஈடுபடுகிறது, தனது கூட்டைக் கட்டும் தேனீ பல கட்டிடக்கலைஞர்களை வெட்கப்படும்படி செய்கிறது. ஆனால், மிகத்திறமையற்ற கட்டிடக் கலைஞனுக்கும், மிகச் சிறந்த தேனீக்கும் இடையிலுள்ள வேறுபாடு, கட்டிடக்கலைஞன் கட்டிடத்தை உண்மையாகக் கட்டுமுன்னரே கற்பனையில் கட்டிவிடுகிறான் என்பதாகும்.*

## கார்ல் மார்க்சின் கடிதம்

கார்ல் மார்க்சு - மார்ச் 5, 1852-ல் Weydemeyer க்கு எழுதிய கடிதமொன்றிலிருந்து பெறப்பட்ட பின்வரும் பகுதி அவரின் ஆய்வுகள், கண்டுபிடிப்புகளின் சாராம்சத்தைத் தருகிறது.

" நவீன சமூகத்தில் வர்க்கங்களின் இருப்பையோ அவற்றுகிடையான முரண்பாட்டினையோ கண்டறிந்ததற்கான பெருமை எனக்குரியதன்று. எனக்கு நீண்ட காலத்துக்கு முன்னரே வர்க்க முரண்பாட்டின் வரலாற்று வளர்ச்சியை பூர்ஷ்வா வரலாற்றறிஞர்களும், வர்க்கங்களின் பொருளியல் சட்டகத்தைப்பற்றி பூர்ஷ்வா பொருளியலாளர்களும் விவரித்துவிட்டார்கள். நான் புதிதாக செய்ததெல்லாம், பின்வருவனவற்றை நிறுவியதுதான்.

1. உற்பத்தி வளர்ச்சியின் குறிப்பிட்ட வரலாற்றுக் காலகட்டங்களில் மட்டுமே வர்க்கங்களின் இருப்பு கட்டுண்டிருக்கிறது.
2. வர்க்க முரண்பாடானது பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்துக்கு இட்டுச்செல்லும்.
3. இந்தப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமானது வர்க்கங்களினதும் வர்க்க சமுதாயத்தினதும் அழிவுக்கான இடைமாறு நிலையை மட்டுமே அமைத்துக்கொடுக்கும். "

## இறுதிக் காலம்

1881 ஆம் ஆண்டு திசம்பரில் மார்க்சின் மனைவி ஜெனி காலமானார். இதன்பின் மார்க்சு 15 மாதங்கள் மூக்கடைப்பு நோயினால் அவதியுற்றார்.

இறுதியில் இது மூச்சுக்குழாய் அழற்சி (bronchitis), நுரையீரலுறை அழற்சி (pleurisy) போன்ற நோய்களாகி அவரது உயிரைப் பறித்தது. 1883 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 14 ஆம் தேதி மார்க்சு இலண்டனில் காலமானார்.

இறக்கும்போது நாடற்றவராக இருந்த மார்க்சை இலண்டனிலுள்ள ஹைகேட் இடுகாட்டில் அடக்கம் செய்தனர்.

மார்க்சின் நெருங்கிய தோழர்கள் பலர் இவரது இறப்பின்போது கலந்துகொண்டு பேசினர். இவர்களுள் வில்ஹெல்ம் லீப்னெக்ட், பிரெட்ரிக் ஏங்கல்ஸ் முதலியோர் அடங்குவர். ஏங்கெல்சு பேசும்போது,

> "மார்ச்சு 14 ஆம் தேதி மூன்று மணிக்கு கால் மணிநேரம் இருந்த போது வாழ்ந்து கொண்டிருந்த மிகப்பெரிய சிந்தனையாளர் சிந்திப்பதை நிறுத்திவிட்டார். இவர் இரண்டு நிமிடங்கள் மட்டுமே தனிமையில் விடப்பட்டிருந்தார். திரும்பி வந்து பார்த்தபோது அவர் தனது நாற்காலியில் மீளாத்துயிலில் ஆழ்ந்துவிட்டதைக் கண்டோம்" என்றார்

## கார்ல் மார்க்சின் கல்லறை

இவரது கல்லறையில், பொதுவுடமை அறிக்கையின் இறுதி வரியான *Workers of All Land Unite* (உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்) என்பதும், *The philosophers have only interpreted the world in various ways—the point however is to change it* (மெய்யியலாளர்கள் உலகை விளக்குவதற்கு மட்டுமே பல வழிகளைக் கையாண்டுள்ளனர் - நோக்கம் அதனை மாற்றுவதே) என்ற வரிகளும் பொறிக்கப்பட்டுள்ளன.

1954 ஆம் ஆண்டில் பெரிய பிரித்தானியப் பொதுவுடமைக் கட்சி மார்க்சின் கல்லறையை அமைத்தனர்.

இதில் லாரன்ஸ் பிராட்ஷாவினால் உருவாக்கப்பட்ட மார்க்சின் மார்பளவுச் சிலையும் உள்ளது.

மார்க்சின் முந்தைய கல்லறை மிகவும் எளிமையானதாகவே இருந்தது.

1970 ஆம் ஆண்டில் இக் கல்லறையை கையால் செய்த வெடிகுண்டு மூலம் தகர்க்க முயற்சி செய்யப்பட்டது. ஆயினும் இது வெற்றியளிக்கவில்லை.

## வேதாத்திரி மகரிசி வாழ்க்கைக் குறிப்பு (கி.பி.1911-2006)

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி கூடுவாஞ்சேரி என்னும் கிராமத்தில் செங்குந்த கைக்கோளர் மரபில் நெசவுத் தொழில் செய்யும் வரதப்ப முதலியார், முருகம்மாள் (சின்னம்மாள்) தம்பதியர்களுக்கு எட்டாவது குழந்தையாகப் பிறந்தார்.

சிறுவயது முதலே வேதாத்திரி மகரிஷி அவரது தாயார் சின்னம்மாளிடம் நிறைய பக்திக் கதைகளையும், புராணக்கதைகளையும் அறிந்து கொண்டார்.

இவரது குடும்பச்சூழலில் இவருக்கு அதிகம் படிக்க வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது.

தன்னுடைய சொந்த ஊரில் மூன்றாவது வகுப்பு வரை படித்த இவர், பின்னர் தங்கள் குடும்பத் தொழிலான தறி நெய்தலைச் செய்யத் தொடங்கினார்.

18ஆவது வயதில் சென்னையில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் வாய்ப்பு இவருக்கு ஏற்பட்டது.

சென்னையில் இவருக்கு ஆயுர்வேத மருத்துவர் எஸ். கிருஷ்ணாராவின் நட்பு கிடைக்க, அவர் மூலமாக தியானம், யோகா போன்றவைகளைக் கற்றார் மகரிஷி.

தனது வாழ்க்கையின் குறிக்கோளாகிய முழுமையை உணரும் நோக்கத்தால்
உதப்பட்டு; சித்த, ஆயுர்வேத மற்றும் ஹோமியோபதி போன்ற மருத்துவ துறைகளைக் கற்றுத் தேர்ச்சி பெற்றார்.

மேலும் இரண்டாவது உலகப் போரின் போது முதலுதவிப் பயிற்சியாளராகவும் பணிபுரிந்தார். பின்பு பொருளாதாரத் தன்னிறைவு பெற வேண்டும் என்று, தனது சுய முயற்சியினால் பல்லாயிரம் நபர்களுக்கு வேலை அளிக்கக்கூடிய அளவிற்கு ஒரு பெரிய நெசவுத் தொழிற்சாலையை உருவாக்கினார்.

அச்சமயத்தில் அரசாங்கத் தொழிற்கொள்கை மாற்றம் காரணமாக வியாபாரம் திடீர் சரிவு நிலையை அடைந்தது;

இருப்பினும் தன்னிடம் பணிபுரிந்த 2000 குடும்பங்களையும் காப்பாற்றுவதற்காக ஈட்டிய பொருள் அனைத்தையும் அவர்களுக்கே செலவழித்து அனைத்துப் பொருள் வளத்தையும் இழந்தார்.

அப்படியிருந்தும் மனத்தைத் தளரவிடாது மீண்டும் கடுமையாக உழைத்து படிப்படியாக பொருளாதாரத்தில் தன்னை மேம்படுத்திக் கொள்ள அரிசி வியாபாரம் போன்ற பல்வேறுபட்ட தொழில்களைச் செய்து தனக்கும், தன்னைச் சுற்றியுள்ளவர்களின் துன்பத்தைப் போக்கவும் பாடுபட்டார்.

தன் இரண்டு மனைவியருடைய மனத்தையும் நன்கு புரிந்தவராய் இருவரிடமும் பிணக்கின்றி அன்புடன் வாழ்ந்து காட்டினார்.

வறுமையிலேயே வாழ அடியெடுத்து வைத்த அவரது உள்ளத்தில் வறுமை என்றால் என்ன? கடவுள் என்பது எது? அதை ஏன் காண முடியவில்லை? மனித வாழ்க்கையிலேயே ஏன் துன்பங்கள் தோன்றுகின்றன போன்ற கேள்விகள் அவ்வப்போது ஒலித்துக் கொண்டே இருந்தன.




இவற்றிற்கு காரணங்கள் கண்டு தெளிவு பெறுவதற்காக ஆராய்ச்சியிலும் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார்.

விளைவாக தனது 35வது வயதில் தன்னிலை விளக்கமாக இறைநிலையை உணர்ந்தார். அதன் அடிப்படையில் உலக மக்களுக்காக அவர் அளித்த வாழ்க்கை நெறியே மனவளக்கலை ஆகும்.

46 ஆம் அகவையில் உலக அமைதிக்காக 'உலக சமாதானம்' World peace என்ற 200 பாடல்கள் நூலை எழுதி 1957ல் வெளியிட்டார்.

இந்த இருமொழிகள் (தமிழ், ஆங்கிலம்) நூலை பாடத்திட்ட வழி பள்ளி, கல்லூரிகளில் பரப்ப வாழ்நாள் இறுதிவரை உழைத்து வெற்றி பெற்றார். இன்று பல பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பு, மேல்பட்டப்படிப்பு, ஆராய்ச்சிப்படிப்பில் பலர் ஈடுபட்டு வருகின்றனர்.




## ஆன்மிகத் தேடல்

தனது சகோதரியின் மகளை (லோகாம்பாள்) மணந்து இல்லற வாழ்க்கையைத் தொடங்கினார். இல்லறத்திலும், நெசவுத் தொழிலிலும் ஈடுபாடு அதிகமிருந்த போதிலும் தனது ஆன்மீகத்தேடலில் மிகுந்த ஆர்வத்துடன் நாட்டம் கொண்டிருந்தார்.

சித்தர்களின் நூல்களைக் கற்று, தியானத்தில் வெகுவாக ஈடுபட்டு தன்னை அறிதல் என்ற அகத்தாய்வு முறையில் விடாமுயற்சியுடன் ஈடுபட்டார்.

இவரது ஆழ்ந்த ஆன்மீகத் தேடலின் விளைவாக தனது 35ஆவது வயதில் ஞானம் பெற்றார். அதிலிருந்து அடுத்த 15 ஆண்டுகளில் பல உன்னதமான ஆன்மீகக் கருத்துக்களைத் தனது எழுத்துக்களின் மூலமாகவும், உரைகளின் மூலமாகவும் மக்களுக்கு எடுத்துரைத்தார்.

பின்னர் தனது நெசவு தொழிலை முற்றிலும் விட்டு விட்டு தன்னை முழுமையாக ஆன்மீகத் துறையில் ஈடுபடுத்திக் கொண்டார்.

## நூல்கள் இயற்றல்

இந்தப் பிரபஞ்சத்தைப் பற்றியும் மனித வாழ்க்கையைப் பற்றியும் தவநிலையில் தான் பெற்ற கருத்துக்களைப் பல கவிதைகளாகவும் கட்டுரைகளாகவும் புத்தக வடிவங்களில் இந்த உலகுக்கு மகரிஷி அவர்கள் அளித்துள்ளார்கள்.

இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் கலந்த தமிழ்ப்பாடல்களை இயற்றியிருக்கிறார்.

பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் எளிய தமிழில் தனது தத்துவங்களை எடுத்துரைத்தார். எல்லா மதங்களின் சாரம் ஒன்றே என்பதை மகரிஷி அவர்கள் வலியுறுத்துகிறார்.

1957ல் மகரிஷி 'உலக சமாதானம்' என்னும் நூல் ஒன்றை வெளியிட்டார். தொடர்ந்து பல்வேறு நாடுகளுக்குச் செல்லும் வாய்ப்பு இவருக்குக் கிட்ட அங்கெல்லாம் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

மனிதகுலம் அமைதியாக வாழ ஏற்ற கருத்துகளையும் சாதனை முறைகளையும் உலகமெங்கும் பரப்பிட 1958-ஆம் ஆண்டில் வேதாத்திரி மகரிஷி அவர்கள் நிறுவிய உலக சமுதாய சேவா சங்கம்.

இன்று இந்தியாவிலும், சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான், தென்கொரியா, அமெரிக்கா போன்ற நாடுகளிலும் பல கிளைகளைக் கொண்டு இயங்கி வருகிறது.

வேதாத்திரி மகரிஷி ஏறக்குறைய தமிழிலும் ஆங்கிலத்திலும் சேர்த்து எண்பது நூல்களை எழுதியுள்ளார். சுமார் 2000 க்கும் மேற்பட்ட கவிதைகளை எழுதியுள்ளார்.

## அருட்பெருஞ்சோதி நகர்



கொங்கு நாட்டில் பொள்ளாச்சி நகருக்கு அருகே வால்பாறை மலையோரத்தில் ஆழியாறு நீர்த்தேக்கம் அமைந்துள்ள இடத்தில் அருட்பெருஞ்ஜோதி நகர் எனும் நகரம் வேதாத்திரி மகரிஷியால் 1984 கால கட்டத்தில் அமைக்கப்பட்டது.

அன்பொளி என்னும் ஆன்மீ இதழ் ஒன்றையும் வெளியிட்டார். இன்றும் தமிழ், ஆங்கிலம் மொழிகளில் வெளிவருகின்றன.

## மறைவு[

வேதாத்திரி அவர்கள் தனது 95வது வயதில் மார்ச் 28, 2006 செவ்வாய்க்கிழமையன்று மறைந்தார்..இவரைது உடல் சித்தர்கள் முறைப்படி ஆழியார் அறிவுத்திருக்கோயிலில் அடக்கம் செய்யப்பட்டு, மணிமண்டபம் அமைத்து தினமும் ஐந்து வேளையில் தியானம் நடைபெற்று வருகிறது.

## வேதாத்திரி மகரிசியும் காரல் மார்க்சும்.

இன்றைய மானுட சமூகத்தின் பல்வேறு கொடுமைகளுக்கும், அழிவுகளுக்கும் காரணமாக இருப்பது நமது பொருளாதார அமைப்பு.

பொருளுடைமையும், சொத்துடைமையும் மனிதரால் உருவாக்கப்பட்டவை.

- "உலகத்தின் உடமைகள் அனைத்தும் மக்கள் அனைவருக்கும் பொதுவானவை அவற்றை காலப்போக்கில் சில வசதி படைத்த மனிதர்கள் தங்கள் தனியுடமையாக்கிக் கொண்டனர். தொழிலாளிகளின் உழைப்பை சுரண்டி முதலாளிகள் வளர்கின்றனர். அதனால்தான் இருப்பவர்கள் சிலரும், இல்லாதவர்கள் பலருமாக சமுதாயம் மாறி வருகிறது. இந்த நிலை மாற வேண்டும். அதற்கு முதலாளிகள் இணங்க மாட்டார்கள். ஆகவே தொழிலாளிகள் ஒன்று திரண்டு போராடி புரட்சி செய்து தங்கள் உரிமைகளைப் பெற வேண்டும்".

இதுதான் **காரல்மார்க்சு பொதுவுடமைக் கொள்கை**

வேதாத்திரி மகரிசியோ பொதுவுடமைப் பற்றி காரல் மார்க்சை விட அதிகமாகச் சிந்திக்கிறார்.

எல்லைகள் கடந்த எல்லையில்லா அன்பு நோக்கு உருவாக உலகமே ஓர் குடும்பம் என்ற உயர்வான உயர்வு ஊற வேண்டும்.

அனைத்து நாடுகளின் சாதி சமய நிற இனத்தாம் ஊறில்லா உள்ளத்ததுடன் ஒரே வண்ண எண்ணம் பெற்றால் தான் உலகப் பொதுமை நல்லதிட்டங்களை நல்லபடி நிறைவேற்ற இயலும்.

பொது இணைப்பில், உறவின் தொடர்பில் உருவாகும் ஒட்டுறவின் இறுக்கத்தால் நெருக்கத்தால் மட்டுமே சுயநலம் கழன்று பொதுநலம தழைக்கும் என்பது உறுதி. அதனால் தான் வேதாத்திரி மகரிசி

**"உலகத் திருந்தி உலக மக்கள் ஒன்றாய் வாழ"**

**"அனைத்துலக மக்களும் ஓர் குடும்பமாக"**

**"மண்ணுகில் புதிய சமுதாயம் தோன்றும்"**

போன்ற குவலயக் குலப் பொதுமைக் கருத்துக்களை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார்.

இன்னும் ஒருபடி மேலே சென்று சாதி , சமய, இன, நிற, கட்சி. நாடு வேறுபாடற்ற ஒருலகக் குடியாட்சியே வேண்டும் என்கிறார்.

**"எங்கள் நாடென்றெவரும் பிரித்துச் சொல்ல
இடமில்லா உலகப் பொது ஆட்சி காண்போம்!"**

**"நாடனைத்தும் இணைந்துலகில் நல்லாட்சி காண்போம்"**

**"ஓலக ஆட்சியின் கீழ் சுதந்திரமாய் வாழ்வோம்"**

என்பது வேதாத்திரியாரின் பரந்து விரிந்த பாருலகக் கண்ணோடடத்தில் மலர்ந்த புத்தாக் ஆட்சிக் கருத்தாகும்.

பாருலகப் பேராட்சியில் பொருளாதாரச் சுபிட்சமும் சமத்துவமும் இன்றியயமையாதவை ஆகும்.

ஏழை, பணக்காரன் என்ற ஏற்றத் தாழ்வு குறைந்து சரிநிகர் சமச் சமுதாயம் நிறைவாக நிறைய பொதுப் பொருளாதார முறையே சிறந்தது என்பது வேதாத்திரியாரின் கருத்து.

எல்லாரும் எல்லாமும் பெற்று வல்லோராக நல்லோராக வலம் வருகின்ற பொதுமைப் பொருளியலே சிறந்தது என்று பல இடங்களில் பதிவு செய்துள்ளார்கள்.

**"பார் முழுதும் பொருள் துறையில் சமநீதி காண்"**

**"பொருட்களெல்லாம் பொதுவுடமை நாட்டில்"**

எனப் பலப்பபல கருத்துக்களை வேதாத்திரியத்தில் பதிவு செய்துள்ளார்கள்.

**"எங்கெங்கும் உலகினலே பிறப்போர்க்கெல்லாம்
இவ்வுலகம் சொந்தமென்ற உண்மை ஏற்று"**

என்று ஓருலகச் சொத்துரிமைப் பற்றி நானில மக்களுக்கு நல்லுரை நல்குகிறார் வேதாத்திரியார்.

பொருளியல் வேறுபாடுகளுக்கும் சமூகச் சீரழிவிற்கும் காரணமான தனியார் சொத்துரிமை தடை செய்யப்பட வேண்டுமென்பதே வேதாத்திரியாரின முடிவு.

தலை சிறந்த கல்வியறிவால் மட்டுமே ஞானம் தலை நிமிர முடியும் என்பது வேதாத்திரியாரின வேதவாக்காகும்.


அந்த அறிவைப் போதிக்கம் மொழியும், ஆசிரியர்களும் அவனிக்கே பொதுமையாக அமைய வேண்டும் என்பது வேதாத்திரியாரின் புதுமையான கருத்தாகும்.

எல்லாத் துறைகளிலும் கைதேர்ந்த அறிஞர்களின் கைவண்ணம் பதிவுபெற அறிஞர் பொதுமைத் திட்டம் உதவி செய்யும்.

**"பொது மொழியால் உலகம் ஒன்றாம்"**

**"ஞானப் பேறு உலகெங்கும் ஓங்க வேண்டும்"**

**"அறிவு நலமுடையோர் மேன்மேலும் பெருக!"**




போன்ற வேதாத்திரிய வரிகள் மகரிசியின் மொழி, கல்வி, அறிவு பற்றிய பொதுமைக் கருத்தாக்கத்தினை துலக்குவனவாகும்.

ஒரு சமூகத்தின் நல வாழ்வை நிர்ணயிப்பதில் மிகக் குறிப்பிடத்தக்க பங்கை வகிப்பது பொருளாதார அமைப்பாகும்.

ஒரிடத்தில் பணக்குவிப்பும், மற்றோரிடத்தில் வறுமையும் நிலவும் சமூகத்தின் சீர்நலம் அழிவுறுகிறது.

பணக்காரர், ஏழை என்ற இரண்டு வர்க்கங்களாக மானுடம் பிளவுபடுகிறது. பொருளாதார ஏற்றதாழ்வின் விளைவாக வருவதை பற்றி **வேதாத்திரி மகரிசி** குறிப்பிடுகின்றார்.

- 1. பட்டினி 2. நோய் 3. பகை 4. வஞ்சம் 5. பஞ்சமா பாதகம் 6. ஏமாற்றுதல் 7. கடன் 8. இல்வாழ்வில் மனமுறிவு 9. கல்லாமை 10 பிச்சை 11. தேவையற்ற பொருள் தோற்றம் 12. நல்வாழ்விற்கான பொருள் உற்பத்திக குறைவு.

ஆகியவற்றை குறிப்பிடுகின்றார்.

சமூக இயங்கியிலின் அடிப்படை, உழைப்பும் உழைப்பாளர்களும் தான். உழைப்புதான் பொருளாதார அமைப்பை நிர்ணயம் செய்யும் ஆற்றலாக இருக்க் வேண்டும்.

உழைப்பு சாராத -உறபத்தி சாராத - வணிகம் என்பது சமூகத்தில் மேலாதிக்கம் பெறுகிறது.

- ”சொத்துரிமையும், வணிகமும் ”சமூகத்தின் பதர்கள்”

என்பார் வேதாத்திரி.

”பொருட்களெல்லாம் பொது உடைமையான நாட்டில்
பொது நலத்தில் தன் நலத்தைப் பொருத்தி மக்கள்
பொருள் ஈட்ட ஒற்றுமையாய் உழைப்போர், நல்லோர்
போதனைகள் எளிதாகச் செயலாய் மாறும்
பொருள் இட்டத் தெரியாதோர் இயலாதோர்க்கும்
போதுமென்ற அளவினிலே வசதி கிட்டும்
பொருள் துறையில் பொது முறையைக் கண்டுவிட்டால்
பொதுத் தொண்டே வாழ்வாகும் அறம் தழைக்கம்” ((ஞா.க.19)

பொதுவுடமையால்தான் உலகம் தழைக்கும் என்று ஆணித்தரமாக பதிவு செய்கிறார் வேதாத்திரி மகரிசி.

- "சமுதாயத்தின் இறந்தகால வரலாறு வர்க்கப் போராட்டத்தின் வரலாறு, முதலாளிகளின் பொருளாதார பலம் பெருக பெருக தொழிலாளிகள் நசுக்கப்படுகிறார்கள். பொருத்தது போதும் என்று பொங்கியெழுந்து தொழிலாளிகள் ஒன்றுபட்டு முதலாளித்துவ

போக்கை மாற்ற வேண்டும். தொழிலாளிகள் தங்கள் தேவைகளையும், விருப்பங்களையும் நிறைவேற்றிக் கொள்ள தொழிற்சங்க அமைப்பை உருவாக்கிக் கொள்ள வேண்டும்".

இதுதான் மூலதனம் என்ற அந்த நூலில் கார்ல் மார்க்ஸ் வாதிட்ட அடிப்படைக் கருத்து.

நம்முடைய பொருளாதார அமைப்பை "மூலதனம்" என்ற தவறான கருத்தாக்கத்தால் நிர்ணயிக்கப்படும் போக்கு உருவாகிவிட்டது.

மூலதனம் என்பது தனியார் உரிமையாக அமையும் போது கீழ்கண்ட வகையில் சீரழி
வுகள் ஏற்படும் என்கிறார் வேதாத்திரி மகரசி.

1. சுயமுயற்சி – சுயஉழைப்பு இல்லாமல் போகும்.
2. பிறருடைய உழைப்பைச் சுரண்டும் நிலை உருவாகும்.
3. பணம் என்பதே வாழ்வை இயக்கும் ஆற்றலாக மாறிவிடும்.

## மூலதனப் போராட்டம்.

மூலதனம் இட்டுத் தொடங்கப்படும் எவ்வகைத் தொழிலும் அத்தொழிலிருந்து கிடைக்கும் வருவாயும், மூலதனத்தின் விளைவுப் படைப்பாகக் கருத்து வடிவம் பெறுகிறது.

1. மனிதருக்கிடையே போட்டி, பகை
2. ஒழுக்கமில்லாத பொருள் குவிப்பு நெறி
3. ஆடம்பரம் x வறுமை என்ற சமூகப் பிளவு நிலை
4. பிறர் உழைப்பைச் சுரண்டும் செயல் தன்மை

"மூலதனமே அரசை, மதங்கள் தம்மை முறை மாற்றி
விட்டுள்ளது சிந்திப்பீரே"

என்கிறார் **வேதாத்திரியார்**.

"மூலதனம் தனிமனிதன் உரிமை யாரும்
முறையின்கீழ் கருத்து செயல் முரணாயிற்று
மூலதன உரிமக்கே மனிதர் இன்று

முயற்சித்துப் போட்டியினால் நலிகின்றார்கள்
மூலதனம் பொரும்பாலோர் ஒழுக்கம் போக்க
முறை தவறி குற்றமிழைக்கின்றார் மக்கள்
மூலதனமே அரசை மதங்கள் தம்மை
முறை மாற்றி விட்டுளது சிந்திப்பீரே" (ஞா.க.25)

என்று மூலதனப் போராட்டம் பற்றி வேதாத்திரியார் குறிப்பிடுகின்றார்.

உலகம் முழுவதும் தொழிற்சங்கங்கள் இருப்பதற்கு காரணம் கார்ல் மார்க்ஸ்தான். மார்க்ஸின் பொதுவுடமை கருத்துகள் உலகம் முழுவதும் பரவி வலுப்பெறத் தொடங்கின.

மார்க்ஸ் முன்னுரைத்தது போலவே புரட்சிகள் வெடிக்கத் தொடங்கின. 1917-ஆம் ஆண்டு ரஷ்யாவில் நவம்பர் புரட்சி நடந்து லெனின் தலைமையில் பொதுவுடமை ஆட்சி (கம்யூனிஸ்ட் ஆட்சி) மலர்ந்தது.

அதன் பின்னர் ஒன்றன்பின் ஒன்றாக செக்கோஸ்லோவாகியா, யூகோஸ்லாவியா, கிழக்கு ஜெர்மனி, ஹங்கேரி, போலந்து, பல்கேரியா, ருமேனியா, அல்பீரியா, சீனா, வடகொரியா, வியட்நாம், கியூபா போன்ற நாடுகளுக்கு கம்யூனிசம் பரவியது.

இன்றைய உலகில் ஒரு தொழிலாளியின் நலன் காக்கப்படும் ஒவ்வொரு கணமும் மார்க்ஸுக்குதான் நன்றி சொல்கிறது வரலாறு.

பாட்டாளிகளை அவர் அன்புடன் 'காம்ரேட்ஸ்' அதாவது 'தோழர்களே' என்றுதான் அழைத்தார்.

இன்றும்கூட தொழிற்சங்கங்களில் அந்த சொல் பயன்படுத்தப்படுகிறது.

பொதுவுடமைக் கொள்கையில் அடிப்படையில் எந்த பிரச்சினையும் கிடையாது.

கம்யூனிசத்தின் இன்றைய அழிவிற்கு அது நடைமுறைப் படுத்தப்பட்ட விதம்தான் காரணமே தவிர, அதன் அடிப்படை நோக்கங்கள் அல்ல.

அந்த நோக்கங்கள் உயரியவை. மார்க்ஸ் நினைத்தது போலவே அது செயல்படுத்தப் பட்டிருந்தால் அதைவிட ஒரு நியாயமான பொருளியல் சித்தாந்தம் இருக்குமா என்பது சந்தேகமே.

**பொதுவுடமைப் பொருளாதாரம் அமைப்பு, உலகமெல்லாம் தழைக்க வேண்டும் என்று கனவு காண்கிறார் வேதாத்திரி மகரிசி**.

பொதுவுடமைத் தத்துவம் என்பது ஒரு பொருளாதாரச் சமன்பாட்டு நெறி மட்டுமல்ல. அது ஒரு சமூக நல் வாழ்வுத் தத்துவம் என்பதை வேதாத்திரி மகரிசி அவர்கள் மிக அழுத்தமாக கொள்கையாக கொண்டிருக்கிறார்கள்.

அறநெறி சார்ந்த வாழ்வியல் - ஒற்றுமையும். பொது நலமும் சிறக்கும் வாழ்வியல் அமைய வேண்டும் என்பது தான் அது என்பதை வேதாத்திரி மகரசி அவர்கள் மிக அழுத்தமாக உணர்ந்துரைக்கிறார்கள்.

## பொதுவுடமை அமையும் முறை.

மக்கள் நலம் சார்ந்த பொருளதார அமைப்பு, பொதுவுடமை வழியாகத்தான் அமைய முடியும் என்பதை அழுத்தமாக உணர்ந்து உரைத்துள்ள வேதாத்திரி மகரிசி, அதை உருவாக்குவதற்கான வழிமுறைகளையும் மிகத் தெளிவாகக் காட்டுகிறார்.

”**பணம் என்ற குறீயீட்டின் ஆளுமை அகற்றப்பட்டு, ஆன்மீகமும் அறநெறியும் தழுவிய பொதுவுடைமைக் கோட்பாட்டை**, கூட்டுறவு முறையில் பொருளாக்கமும் பங்கீடும் நடைபெறும் தத்துவத்தை மிக அழுத்தமாக வேதாத்திரி மகரிசி அவர்கள் மானுடத்திற்கு வழங்கி உள்ளார்கள். அது மானுடப் பண்பாக மலரும் காலம் வரும்.

பாருலகின் பரந்துபட்ட பல்வேறு துறைகளைப் பற்றிய பொதுவுடமைக் பயன்பாட்டுச் சிந்தனை முடிவுகளை முத்தாய்ப்பாக விதைத்துள்ளார் வேதாத்திரியார்.

வேதாத்திரியத்தில், அரசியல், ஆன்மீகம், அறிவியல், பொருளியல், கலை, இலக்கியம், கல்வி, மொழியியல், வேளாண்மை, இல்லறம், குழந்தையியல், உடலியல், பாலியல், இசை, ஒழுக்கவியல் போன்றவை பற்றிய தெளிவான தீர்க்க் தரிசனமாகத் தீர்வுகள் பதிவு செய்யப்பட்டுள்ளது வியப்பிற்குரியதாகும்.

எல்லாத் துறைகளிலும் எல்லையில்லா உலகப் பொதுமை நல வளர்ச்சிக் கண்ணோட்டமே உயிர்நாதமாக இழையோடியுள்ளதும் மார்க்சையே திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.

ஒரு கருத்தைச் சொல்வது பெரிதல்ல. அதற்கான வழிமுறைகளையும், சிக்கலுக்கான தீர்வையும் எடுத்துச் சொல்வதில்தான் அக்கருத்திற்கான உரத்த சிந்தனை புலப்படும்.

அந்த வகையில் வேதாத்திரி மகரிசி உலகப் பொதுமை வேண்டும் என்று மட்டும் கூறாது அடிப்படை அரசமைப்பின் கட்டமைப்பு எப்படி இருக்க வேண்டும்? எப்படி இயங்க வேண்டும்?

கொள்ளப்பட வேண்டியதும், தள்ளப்பட வேண்டியதுமான கொள்கைகள் என்னென்ன? என்பனவற்றையும் வரையறுத்து உரைக்கின்றார்..

வள்ளுவத்தைப் போல், மார்க்சியத்தைப் போல் வேதாத்திரியம் இந்த உலகுக்கு நின்று நன்மை செய்யும் எனபது திண்ணம்.

## துணைநின்ற நூல்கள்


1. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிசி
2. அன்பொளி மாதஇதழ்கள், வேதாத்திரி மகரிசி
3. மாக்கோலமாய் விளைந்த மதிவிருந்து.
4. உலகசமாதானம், வேதாத்திரி மகரிசி.

5. வேதாத்திரி மகரிசியின் பொன்மொழிகள் 5000- அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்
6. வேதாத்திரிய சிந்தனைகள், தமிழ்ப் பல்கலைக்கழகம்.
7. சரியானது பற்றிய ஹெகலின் தத்துவத்தின் திறனாய்விற்கு அறிமுகம் (*Introduction to a Critique of Hegel's philosophy of Right*)-1843.
8. தத்துவத்தின் வறுமை (*The Poverty of Philosophy*) - 1847.
9. சுதந்திரமான நாணயமாற்றுக் கேள்வி பற்றிய சொற்பொழிவு (*Discourse upon The Question of Free Exchange*) -1848.
10. கம்யூனிஸ்ட் அறிக்கை (*The communist Manifesto*) - 1848.
11. மூலதனம் (*Das kapital*) - 1867
12. அரசியல் பொருளாதார திறனாய்விற்கு அறிமுகம் (*Introduction to the Critique of Political Economy) -1859.*

"VETHATHIRIAM BANUKUMAR" என்ற தலைப்பில் YOUTUBE-ல் கீழ்க்கண்ட தலைப;புகளில் சிந்தனைகளைப் பகிர்ந்துள்ளோம். வாய்ப்புள்ளவர்கள் பயன்பெற்று இன்புறலாம்

## ஒப்பாய்வு இலக்கியம் (வேதாத்திரி மகரிசி)

1. திரிகால ஞானிகள் (விவேகானந்தரும் வேதாத்திரயமும் https://youtu.be/EwEuFRO-czw
2. சாக்ரட்டிசும்- வேதாத்திரி மகரிஷியும் - https://youtu.be/vZxMOafSHvg
3. கிரேக்க தத்துவஞானி பிளோட்டோவும் வேதாத்திரி மகரிஷியும் https://youtu.be/CmT8FXmFY1g
4. பிரெஞ்சு சிந்தனையாளர் வால்டேரும் வேதாத்திரி மகரிஷியும் https://youtu.be/MMMiIVz4gCs

5. சீன தத்துவஞானி கன்பூசியசும் வேதாத்திரி மகரிஷியும் https://youtu.be/NWbtjV-mM2I
6. கிரேக்க தத்துவஞானி அரிஸ்டாட்டிலும் வேதாத்திரி மகரிஷியும் https://youtu.be/aWHHayncaUk
7. கிழக்கும் மேற்கும் https://youtu.be/V6VqskwnAFs
8. கார்ல் மார்க்சும் வேதாத்திரி மகரிஷியும் https://youtu.be/ifdDyEQD_
9. இராபர்ட் கிரீன் இங்கர்சாலும் வேதாத்திரி மகரிஷியும் https://youtu.be/mQ7Aauxws6c
10. தந்தை பெரியாரும் அருட்தந்தையும் https://youtu.be/GY4xK1O10a4
11. காலத்தை வென்ற கவிஞர்கள் https://youtu.be/R9KNiSXgLYY
12. கோளறு பதிகமும் நவக்கிரக தவமும் https://youtu.be/JezKTpli6KE
13. https://youtu.be/-nSvbkV9-Gw

---

14. வேதவாக்கியங்களும் வேதாத்திரிய பிரம்மஞானமும் https://youtu.be/l4-Exy0g8Y0
15. அமெரிக்க மண்ணில் ஆன்மீகத்தை விதைத்தவர்கள் https://youtu.be/maZ3Lrm8dnA
16. கனவில் வந்த புத்தரும் போகரும் https://youtu.be/hbxJR4UvGfo
17. பாவிகளுக்கும் அருளிய பண்பாளர்கள் https://youtu.be/HH_6PtE-JqE
18. பொறாமை பிடித்த மனிதர்கள் https://youtu.be/CHY3PTxgJ-Q
19. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள் https://youtu.be/BKoepL8uKuE
20. ஞாலம் போற்றும் ஞானிகள் https://youtu.be/Ir-eCowQ4bU
21. தாயுமானவரும் வேதாத்திரி மகரிசியும் (https://youtu.be/6gXx08VSUaQ
22. ஐன்ஸ்டைனும் வேதாத்திரி மகரிசியும்
23. ரால்ப் வால்டோரா எமர்சனும் வேதாத்திரியும்
24. **சார்லஸ் டார்வினும் வேதாத்திரி மகரிசியும்**
25. ஜேம்ஸ்ஆலனும் வேதாத்திரி மகரிசியும்
26. வேதாத்திரியத்தில் வால்டேர் சிந்தனைகள்.
27. **சிக்மண்ட் ப்ராய்டும்** வேதாத்திரி மகரிசியும்

# வேதாத்திரி மகரிசி.

1. உலக அமைதிக்கு வேதாத்திரியம் https://www.youtube.com/watch?v=b_yVdESVLYg&t=3s
2. திசைகாட்டும் வேதாத்திரியம் - https://youtu.be/56iXdB7k878
3. உலாவரும் வேதாத்திரியம் https://youtu.be/3QYXDsPAD80
4. என்னைத் தோண்டி ஞானம் கண்டேன் https://youtu.be/KJOFIAld2Pg
5. கருணையுள்ள பேரறிவு https://youtu.be/VfTdi3L8qP4
6. கண்டவர் விண்டிலர் https://youtu.be/41UZPLz2dRw
7. இமைப்பொழுதும் நீங்காதான் தாள் வாழ்க - 13-8- https://youtu.be/jx0RtlaH48g
8. மூலமும் ஞாலமும் https://youtu.be/z_w6SBDb3eU
9. அங்கிங்கெனாதபடி இருப்பதெல்லாம் இறைநிலையே https://youtu.be/OMpKXDHwft0
10. இறையென்பது மொழி கடந்தது. https://youtu.be/LMuOKWlkfVw
11. அருளும் பொருளும் https://youtu.be/RJPGCaleoVU
12. அனைத்தும் சுத்தவெளியே https://youtu.be/S9U21NDwFak
13. பிரபஞ்ச இரகசியம் https://youtu.be/oMCYH-vonUc
14. முடிவற்ற தேடலுக்கு ஒரு முற்றுப்புள்ளி - https://youtu.be/poBHDgqyOjs
15. மருமகள்களுக்கு ஒரு தந்திரம் https://youtu.be/LRRGJV__-XA
16. முக்தி வேண்டுமா? https://youtu.be/hBG4AW6NihY

---

17. ”நான்” பிறந்த கதை https://youtu.be/MZ7voUfoe0Q
18. மனவளக்கலை மன்றத்தின் பல்வேறு முகங்கள் https://youtu.be/wz6nGobFHUU
19. மனைவிக்கு மரியாதை https://youtu.be/Bw2iqc06Zi0
20. அத்திரியும் அனுசூயாவும் https://youtu.be/NQ2cResmSy0
21. தேடி வந்த ஓஜஸ் https://youtu.be/gOFJpxHIa5M
22. சித்தர்கள் நெறியே மனவளக்கலை https://youtu.be/DBDo8gmYIm0

23. வேதாத்திரி மகரிசி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள் https://youtu.be/7s8ebhmASfE
24. தினசரி தியானம் https://youtu.be/t3-jdvjkhB0
25. அவதாரப்புருஷர் அருட்தந்தை https://www.youtube.com/watch?v=t_9TRck_clQ

# வேதாத்திரிய சிந்தனைகள்

1. மூடன் மடையன் முட்டாள் https://youtu.be/lV43Tcl4Ouo
2. இன்ப ஊற்றுப் பெருக https://youtu.be/wQWEn2PZXSg
3. மக்கட்பேறு ஏன் இல்லை https://youtu.be/6AZbuTKKc88
4. ஊரல் உரசல் உறத்தல் ஒழுக்கம் https://youtu.be/ZVzjfEFqbxY
5. மேல் பதிவு https://youtu.be/iCOz89_L8uA
6. புயல்காற்றில் கூட தத்துவம் https://youtu.be/VT1eCTf5M1Q
7. வாழ்க்கை முறை https://youtu.be/iIoEaE2SQng
8. நான் யார்? https://youtu.be/rYHj5_tx8t4
9. அன்பும் அறிவும் https://youtu.be/11xogYcGdk0
10. மெய்யும்பொய்யும் அறிதற்கு எளியது https://youtu.be/ktTwxcir8D8
11. பிறவியின் நோக்கம் எப்போது நிறைவேறும்? https://youtu.be/bGCEEX_vAFk
12. இறைநிலையின் இன்ப ஊற்று https://youtu.be/QVB0RSM8yjI
13. கைரேகை.....மச்சம்...... https://youtu.be/450c-u-wbZc
14. வாழையடி வாழையென வந்த வள்ளல்கள் https://youtu.be/0mmAEIcL6vo
15. சினம் எழாத மனம் https://youtu.be/lYWmT5_F_g0
16. தவத்தில் சீர்திருத்தம் https://youtu.be/loBcRcrjOLc
17. திருமணத்தில் சீர்திருத்தம் https://youtu.be/DW6IOtQ1P4k
18. பாலுணர்வில் சீர்திருத்தம் https://youtu.be/iBiXaZsmeHY
19. பெருமையாக? புகழா https://youtu.be/tSQ11G6WAnA
20. ஆன்மீக விழிப்பு வேண்டும்? https://youtu.be/ncGnEgJqDIM
21. ஞானத்தை பெறுவது எப்போது? https://youtu.be/uUkWs7XXQJc
22. மனவளக்கலையின் மேன்மை https://youtu.be/DIrU3ODA6_g

23.எனது கரைந்தால் தொண்டு https://youtu.be/RhW6P1XcxXU

24.பெற்றோர் வினைத் தொடர் குழந்தைகளா? https://youtu.be/_-Ux9Z33h74

25. குடும்ப வாழ்க்கையும் குண்டலினி யோகமும் https://youtu.be/x0wac_osRNM

26.தனித்திரு பசித்திரு விழித்திரு https://youtu.be/nl3jmx8CL2Y

27.வடக்கில் தலை வைக்கலாமலா? https://youtu.be/E2SD2jxR3vQ

28.தப்புக் கணக்கிட்டால் https://youtu.be/MTYAISIRFrU

29.நீயே எண்ணத்தின் சிற்பி https://youtu.be/yE9Lcm-k4uU

30.எண்ணம் என்றால் என்ன? https://youtu.be/q9M1-23yCHg

31. **சினம் எழாத மனம்** https://youtu.be/lYWmT5_F_g0

32. **எனக்குத் தத்துவம் புகட்டிய பாடல்கள்?** https://youtu.be/LGx1_3ThDRo

33. **நாடி ஜோதிடம் உண்மையா?** https://youtu.be/cGwVzxOdib4 **இரகசியம்** https://youtu.be/T5vtcHtVQxg

34. **ஏன் புகைப் பிடிக்கக் கூடாது?** https://youtu.be/Q2AsxHdNoms

35. **கூர்மையும் நேர்மையும்** https://youtu.be/QVB0RSM8yjl

36. **மனிதனே தெய்வம்** https://youtu.be/SerpiwSfHVw

37. **மன ஓட்டம்** https://youtu.be/Twgt5cv4iZE

38. **சாக்ரட்டீஸ் கேள்விகள்** https://youtu.be/n5-RIaZEkQ0

39. பிரார்த்தனை எப்படி இருக்க வேண்டும்? https://youtu.be/pPK0X25Uvfl

40. தமிழ்ச் சித்தர்கள் https://youtu.be/fKf5eEYwWxc

41. இரண்டு பெரிய பொக்கிஸங்கள் https://youtu.be/xZlt3IEvclc

42. கோள்களின் சுழற்சியால் நன்மை தீமை https://youtu.be/ulfqLiQBJD8

43.ஆண்டவன் கணக்கு https://youtu.be/3GTUxvpAlgc

44.பிறப்பிற்கும் இறப்பிற்கும் உள்ள இடைவெளி வேறுபாட்டிற்கான காரணம் என்ன? https://youtu.be/GI75xVBMzqs

45.உயிர் தோற்றத்தின் காரணம் என்ன? https://youtu.be/2GKAWuWIAvI

46. கடைவீதி … கடைவீதி ஆன்மீகத்தில் https://youtu.be/MjDbM8XaaV8

47. ஓர் உலகம் ஓர் உலகம் https://youtu.be/Y_Yy0F_Gi4Y

48. உணர்தலும் உறைதலும் https://youtu.be/a6UnvVynNOQ
49. கடமையும் உரிமையும் https://youtu.be/Sqeb31GCbe0
50. ஆளுதலும் ஆட்படுதலும் https://youtu.be/o8ezt911sgc
51. பண்புப் பயிற்றி https://youtu.be/HoflzM8BNwk
52. உள்ளத்தின் சோதனை https://youtu.be/HoflzM8BNwk
53. வணங்குதலும் வாழ்த்துதலும் https://youtu.be/HCj2vPis9kg
54. எதிரிகளை ஏன் வாழ்த்த வேண்டும்? https://youtu.be/YtE5pc7zhy4
55. எண்ணத்தின் வலிமை https://youtu.be/AChn9Joi6yY
56. பல பெயர்களில் பிரம்மம் https://youtu.be/8IehOmxDSnY
57. எதிர்பார்த்தல் ஏமாற்றமே! https://youtu.be/uqySX6CPG4Y
58. இறையை அறிய அறிவை அறி https://youtu.be/jDXCctDnof0
59. முன்பின் பிறவிகள் https://youtu.be/BqcPBmLuyyg
60. கடமையும் நீதியும் https://youtu.be/Qi4bqUguqSA
61. மெய்ஞ்ஞான வாசல் https://youtu.be/dHsE0p6597o
62. வேத சாசனமும் வேதாத்திரிய சாஸ்திரமும்https://youtu.be/fK_csHu7e3Q
63. தன்னிலை விளக்கம் https://youtu.be/85D2rwXUO9U
64. வாழ்த்தும் வாழ்க்கை https://youtu.be/p9nIE_Oj7Gs
65. வேதாத்திரியத்தின் வேராகியது பார்த்தசாரதி மாலை https://youtu.be/FfvH7IfBx08
66. காதலும் கற்பும் https://youtu.be/6gYxqM6Zq90
67. உனக்கும் ஒரு நாள் https://youtu.be/L7M60z1XWpo
68. வேதாத்திரியின் இறை சிந்தனை https://youtu.be/GPJYGaZ-UvY
69. அருளால் பிறந்த பிள்ளைகள் (ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிசியும்) https://youtu.be/wdH9u-KBUBo
70. வேதாத்திரியின் ஞானக்களஞ்சியம் https://youtu.be/IcxyW3wcWUY
71. கால்களைத் தொட்டு வணங்கலாமா? https://youtu.be/juU3rHeXRcg

**வாழ்க வையகம்! வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்**